### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 28:5-6

அப்பொழுது, தேவதூதன் அந்த ஸ்திரீகளைப் பார்த்து: நீங்கள் பயப் படவேண்டாம், சிலுவையிலே அறை யுண்ட சேசுநாதரைத் தேடுகிறீர்க ளென்று அறிவேன். அவர் இங்கே இல்லை . ஏனெனில் தாம் திருவுளம்பற்றினபடியே உயித் தெழுந்தார். ஆண்டவர் வைக்கப்பட் டிருந்த இடத்தை வந்து பாருங்கள்.

### அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 24:6-7

அவர் இங்கேயில்லை, உயிர்த்தெழுந்தார். அவர் இன்னம் கலிலேயாவிலிருந்தகாலத்தில் உங்களுக்கு எவ்விதஞ் சொல்லியிருந்தாரென்று நினைவுகூருங்கள். (மத். 16:21.) மனுமகன் பாவிகளான மனிதர் கையில் ஒப்புக்கொடுக்கப்படவும் சிலு வையிலே அறையப்படவும் மூன்றாம் நாள் உயிர்க்கவும் வேண்டியதென்று உரைத்தாரல்லோ, என்றார்கள். (மத். 17:21; மாற். 9:30.)

### அர்ச். மாற்கு சுவிசேஷம் 16:6

அவர் அவர்களை நோக்கி: நீங்கள் அஞ்சவேண்டாம்; சிலுவையில் அறை யுண்ட நசரேனுவாகிய சேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார். இங்கேயில்லை; அவரை வைத்த இடம் இதுவே.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 27:28-29

அவருடைய வஸ்திரங்களைக் கழற்றி, ஓர் சிவப்புச் சால்வையை அவர்மேல் போர்த்தினார்கள். முள்ளுகளால் ஓர் முடியையும் பின்னி, அவருடைய சிரசின்மேல் வைத்து, ஓர் மூங்கில் தடியையும் அவருடைய வலது கையில் கொடுத் தார்கள். பின்னும், அவர் முன்பாக முழங்கால்படியிட்டு: யூதருடைய இராஷஜாவே வாழ்கவென்று அவரைப் பரிகாசம்பண்ணி , (அரு. 19:2, 3.)

### அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 19:30

சேசுநாதர் அந்தக் காடியை வாங்கிக்கொண்டபின்பு: எல்லாம் முடிந்தது என்று சொல்லித் தலை குனிந்து பிராணனைக் கொடுத்தார்.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 21:9

அல்லாமலும் அவருக்கு முன்னும் பின்னுமாக நடந்துவந்த திரளான ஷஜனங் கள்: தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! சர்வேசுரனுடைய நாமத்தினால் வரு கிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்! உந்நதங் களில் ஓசன்னாவென்று கூவி ஆர்ப் பரித்துக்கொண்டு போனார்கள். (சங். 117:26; மாற். 11:10; லூக். 19:38.) மூ 9. ஓசன்னா என்பதற்கு, புகழ்ச்சி, தோத்திரம், வாழ்த்துதல் உண்டாகக்கடவதென்று

அர்த்தமாம்.

## அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 23:46

சேசுநாதரோ உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு: பிதாவே, என் ஆத்துமத்தை உம்முடைய கரங்களிலே ஒப்புக் கொடுக்கிறேன் என்றார். இவைகளைச் சொல்லி உயிர்விட்டார். (சங். 30:5.)

## அர்ச். மத்தேயு சுவிசேஷம் 20:18-19

இதோ நாம் ஷெஜருசலேமுக்கு ஏறிப்போகிறோம். மனுமகன் பிரதான குருக்களிடத்திலும். வேதபாரகரிடத்தி லும் ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர் கள் அவரை மரணத்தீர்வையிட்டு, அவரை ஆகடியஞ்செய்யவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும், புறஷஜாதியாருக்குக் கையளிப்பார்கள். ஆயினும், மூன்றாம் நாளில் அவர் உயிர்த்தெழும்புவார் என்றார்.

## அர்ச். மத்தேயு சுவிசேஷம் 27:37

அன்றியும், இவன் யூதர்களு டைய இராஷஜாவகிய சேசு என்பதாய் அவருடைய தீர்ப்பின் நியாயத்தை எழுதி, அவருடைய சிரசுக்கு மேலாக வைத்தார்கள்.

## அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 20:8-9

அப்படியிருக்க, முந்திக் கல்லறையினிடத்திற்கு வந்த அந்த வேறு சீஷனும் அப்பொழுது உள்ளே பிரவேசித்து, தானும் கண்டு விசுவசித்தான். ஏனெனில் அவர் மரித்தோரிடத்தினின்று உயிர்த்தெழுந்தருள வேண்டும் என்கிற வேத வாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள்.

## சக்காரியாஸ் ஆகமம் 9:9

சீயோன் மாதே! மிகு களிகூர் வாயாக; எருசலேம் மாதே! அகமகிழ் வாயாக, நீதிமானும் இரட்சகனு மான உன் அரசன் உன்னிடம் இதோ வருகின்றார்; அவர் எளியவராய்ப் பெட்டைக் கழுதை மீதும், கழுதைக் குட்டிமீதும் ஆரோகணராய் (வரு கின்றார்.)

## அர்ச். மாற்கு சுவிசேஷம் 14:36

அப்பா, பிதாவே! உம்மால் எல்லாங் கூடும். இந்தப் பாத்திரத்தை என்னிடத்தினின்று அகற்றியருளும்; ஆயினும் என் மனதின்படியல்ல, உம் முடைய மனதின்படியே ஆகட்டும் என்றார்.